# SRES - NFIR

# 100 ஆண்டுகள் சரித்திரம் படைத்த SRES க்கு வாக்களித்து வெற்றி பெறச்செய்வீர்

## சங்கம் உருவான வரலாறு

அன்பார்ந்த தொழிலாள சகோதர, சகோதரிகளுக்கு, 1902ல் தொழிற்சங்கம்அமைத்திட ஆரம்பக்கட்டமைப்பு செய்து 1905ல் சம்பளத்தை உயர்த்தி வழங்க வேண்டும் என்று முதல் கட்ட வேலைநிறுத்த போராட்டத்தை நடத்தினார்கள். இதில் பல தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டது. 1911 ல் நடத்திய 2ஆம் கட்ட வேலைநிறுத்த போராட்டம் திரு.அலெக்சாண்டர் – டிரைவர், திரு. மார்கம் அய்யர், SM தலைமையில் நடைபெற்றது. இருவருக்கும் வேலை பறிபோனது. மைலேஜ் அலவன்ஸ்கள் ஓரளவுக்கு கிடைக்க வழிவகுத்தது. 1912ல் ஒரு வாரகாலமாக பெரம்பூர் தொழிலாளர்களால் வேலை நிறுத்த போராட்டம் நடைபெற்றது. திரு.பார்த்தசாரதி நாயுடு – வேகன் ஷாப், திரு.கோபால் – பாய்லர் ஷாப், திரு. சுப்புராயலு – பாய்லர் ஷாப், திரு.கிருஷ்ணன் – CR ஷாப், திரு. ரைட் – CB ஷாப், திரு.A.முகமது – எரக்டிங் ஷாப்பை சார்ந்த இவர்கள் நிர்வாகத்தால் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். 19–12–1913 அன்று பெரம்பூர் பணிமனையில் Dy. சூப்பரண்டன்ட் ஆப் Loco & CW ஆக இருந்த P.G.போர்டியஸ் ஆபிஸில் இருந்து வெளியே வந்து அவரது கை துப்பாக்கியால் சுட்டதில் சிலர் உயிரிழந்தனர். அதனால் 12 தொழிலாளர்கள் 6 முதல் 8 மாதங்கள் சிறையிலடைக்கப்பட்டார்கள். 7.2.1919 மெட்ராஸ் அண்டு சதர்ன் மராட்டா இரயில்வே எம்பிளாய்ஸ் யூனியன் (தற்போது SRES) என்று துவக்கப்பட்டது. 07–02–1919 ஆம் ஆண்டு பெரம்பூரில் துவங்கப்பட்ட SRESன் மத்திய சங்க அலுவலகத்திற்கு 3–9–1927ம் ஆண்டு அண்ணல் **மகாத்மா காந்தி அடிகளால்** அடிக்கல் நாட்டப்பட்டது. ஆங்கிலேயரின் அடிமை சாசனத்திலிருந்து நாடு விடுதலை பெற SRES சுதந்திர போராட்டத்தில் முழுமையாக தன்னை இணைத்துக் கொண்டு ஆங்கிலேயரை திணற வைத்தது அன்று!

மத்திய சங்க ஒற்றுமை நிலையத்திற்கு தேசிய தலைவர்களான திரு. **வல்லபாய் படேல்**, சட்ட மாமேதை **Dr. B.R. அம்பேத்கார், திரு. ஜவஹர்லால் நேரு, திரு. ஜெயபிரகாஷ் நாராயணன், திரு.K.காமராஜர், திருமதி. இந்திராகாந்தி, திரு.ராஜாஜி** போன்ற பலர் வருகை தந்து சிறப்பித்துள்ளார்கள். 1929 முதல் 1934 வரை SRESற்கு தலைவராக இருந்த **திரு.V.V.கிரி** அவர்கள் இந்திய நாட்டின் குடியரசு தலைவராக பொறுப்பேற்று பெருமை சேர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தொழிற்சங்கம் ஆரம்பிப்பதற்கும், ஆரம்பித்த பிறகு வெள்ளை ஆதிக்கத்தை எதிர்த்து பல வேலை நிறுத்த போராட்டங்களையும், சம்பள உயர்வு, வேலை நேரம், அலவன்ஸ்கள் என மேலும் பல கோரிக்கைகளை வலியுறுத்தி பல போராட்டத்தில் வேலை இழந்த தொழிலாளர்களும் உண்டு. துப்பாக்கி சூட்டில் இறந்த தொழிலாளர்களும் உண்டு. 25.10.1930 அன்று வி.வி.கிரி தலைமையில் சம்பள உயர்வு அலவன்ஸ்கள் வேண்டுமென்று மாபெரும் வேலை நிறுத்த போராட்டம். நைட் டியூட்டி அலவன்ஸ், OT அலவன்ஸ், ஓர்க்ஷாப் தொழிலாளர்களுக்கு இன்சென்டீவ், NFIR PNMமூலமாக 1976ல் பதவி உயர்வுக்கான குழு அமைக்கப்பட்டு (RWCT - 1976) எஸ். வெங்கட்ராமன் JGS அந்த குழுவில் அங்கத்தினராக பேச்சுவார்த்தை நடத்தி அதன் மூலமாக இன்று நாம் டெக்னீசியன் Gr.II, Gr.I, Sr. Technician ஆக பதவி உயர்வு பெற்றுக்கொண்டிருக்கிறோம் என்றால் SRES-NFIR தான் காரணம் என்பதை தொழிலாளர்கள் மறக்ககூடாது. போனஸ், சம்பள உயர்வு, அலவன்ஸ், வேலை நேரம் மற்றும் ரன்னிங் ஸ்டாப் அலவன்ஸ் இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி 2–10–1977ல் வேலைநிறுத்த போராட்டம் நடைபெற்றது. இதில் சங்க தலைவர் **திரு. T.V.ஆனந்தன், ஜி.இராஜராம்,** GS மற்றும் 50 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். மாலை 6 மணி வரை வண்டிகள் நிறுத்தப்பட்டன. சென்னை டிவிஷன் மற்றும் சதர்ன் இரயில்வே முழுவதும் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. குப்பம் இரயில்வே ஸ்டேஷனில் 12 மணி நேரம் 1.12.1977 அன்று இரயில்கள் நிறுத்தப்பட்டன. 1979ல் முதல் போனஸை பெற்றோம். அலவன்ஸ்கள் மாற்றி அமைக்கப்பட்டன.

## 1. SRES - NFIR செய்த சாதனைகளில் சில..

1. 1954ல் பென்ஷன் / குடும்ப பென்ஷன் திட்டத்தை அமுல்படுத்தி தொழிலாளர்களை வாழ வைத்திருப்பது.
2. தாஸ் கமிட்டி மூலம் கடந்த 42 ஆண்டுகளாக 6 மாதத்திற்கு ஒரு முறை DA உயர்வு பெற்றுத் தந்தது.
3. 1979ல் போனஸ் சட்டத்தை அமுல்படுத்தி அனைவருக்கும் PLB போனஸ் பெற்றுத்தந்தது மட்டுமல்லாமல் 2006 –07க்கு ரூ.2301/–, 2014–15க்கு ரூ.8976/– அரியர்ஸாகவும் பெற்று தந்தது.

4. 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை CRC மூலம் அப்கிரேடேஷன் பெற்று தந்தது.
5. தொழிலாளர்களுக்கு 8 மணி நேரம் வேலை, HRA, இன்செண்டிவ், OT அலவன்ஸ்களையும் மற்றும் அட்வான்ஸ்களையும் பெற்று தந்தது.
6. ACP க்கு பிறகு MACPS மூலம் 3 அப்கிரேடேஷன்களை பெற்று தந்தது.
7. CCL, Encashment Leave, மாற்று திறனாளிகளுக்கு 4 நாட்கள் SCL பெற்று தந்தது.
8. LARSGESS திட்டத்தின் மூலம் வாரிசுகளுக்கு வேலை பெற்று தந்தது.
9. இரயில்வே தொழிலாளர்கள் அனைவருக்கும் AC கோச்சில் செல்ல பாஸ் பெற்று தந்தது.
10. இறந்த தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு கம்பாஸினேட் அப்பாயின்ட்மெண்ட் பெற்று தந்தது.

## 2. நேஷனல் பென்ஷன் திட்டம்

1.1.2004க்கு பிறகு வேலையில் சேர்ந்த தொழிலாளர்களில் சிலர் இறக்க நேரிட்டு குடும்ப பென்ஷன் இல்லாமல் இன்னலுக்கு உண்டானதை அனைவரும் அறிந்ததே. NFIR - Rly, Bd., PNM Sub No.20/2006 மூலம் பென்ஷன் / குடும்ப பென்ஷன் வழங்க Rly. Bd., யிடமிருந்து உத்தரவு பெற்றோம். (RBE No.31/2009 dt, 29.5.2009) மேலும் Rly. Bd.,PNM 13/2016 மூலம் புதிய பென்ஷன் திட்டத்தில் உள்ள குறைகளை சுட்டிக்காட்டி அனைத்து பென்ஷன்களையும் Rule 38,49,50& 54 of CCS மூலமாக பென்ஷன், குடும்ப பென்ஷன், இன்வேலிட் பென்ஷன் போன்றவற்றை பெற்றோம் (RBE No.78/2017). மேலும்1972 அடிப்படையில் DCRGஐ 31.7.2017 பெற்றோம். (for more details Refer SRES Circular 771, 773, 818, 960)

பணியின் போது இராணுவத்தினரை காட்டிலும் இரயில்வே துறையில் தான் உயிரிழப்பு அதிகம். வருடத்திற்கு சராசரியாக 280 தொழிலாளர்கள் வேலை நேரத்திலே இறக்கிறார்கள். எந்த துறையையும் ஒப்பிட முடியாத வகையில் அடிப்படை, பாதுகாப்பு வசதிகளின்று பணியாற்றும் இரயில்வே தொழிலாளர்களுக்கு புதிய பென்ஷன் திட்டத்திலிருந்து விலக்கு அளிக்க NFIR தொடர்ந்து வலியுறுத்திய கருத்தினை ஏற்று இரயில்வே அமைச்சர் கடிதம் எழுதியிருந்தும் அதனை ஏற்க மறுத்திட்ட நிதி அமைச்சகத்தின் தவறான முடிவினை கண்டித்தும், புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்யும் உத்தரவை உடனே வெளியிட வைக்குமாறு 19.3.2018 அன்று இரயில்வே அமைச்சருக்கு GS/NFIR கடிதம் அனுப்பியிருந்தும், பல முறை நேரிடையாகவும் வலியுறுத்தி பேசியுள்ளார். இருப்பினும் 10% பிடிப்பதை நிறுத்தி புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்து அனைவருக்கும் பழைய பென்ஷன் திட்டத்தை அமுல்படுத்துவதை லட்சியமாக வைத்து SRES-NFIR தொடர்ந்து போராடி வருவதை தொழிலாளர்கள் அனைவரும் அறிவார்கள்.

## 3. டிரான்ஸ்பர் திட்டம்

டிரான்ஸ்பர் பாலிசியை அனைவருக்கும் பொருந்தும் வகையில் நிர்வாகம் ரிலிவர் தேவை என்று உங்களது டிரான்ஸ்பர் அப்ளிகேஷனை ப்ராஸஸ் (Process) செய்யாமலே அப்படியே வைத்திருந்ததை நீங்கள் அறிவீர்கள். இந்த பிரச்சினை தீர்க்க எத்தனை தொழிலாளர்கள் சதர்ன் இரயில்வேயில் டிரான்ஸ்பர் வேண்டும் என்று விண்ணபித்தார்களோ அதற்கேற்றவாறு RRC/RRB மூலமாக ஆட்களை நியமிக்கலாம் என்ற உத்தரவை Rly. Bd.,PNM Sub No.36/2015, 18/2016 மூலமாக 31.8.2015, 10.2.2017, 18.1.2019 பெற்று தந்தது SRES-NFIR. இனி உங்கள் டிரான்ஸ்பர் அப்ளிகேஷனை ப்ராஸஸ் செய்ய நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்கும்.

NFIR - Rly., Bd., PNM Sub No. 36/2015 மூலம் வலியுறுத்தியதன் அடிப்படையில் இன்டர் டிவிஷனல் ரெக்கியூஸ்ட் டிரான்ஸ்பருக்கு இருந்த சர்வீஸ் கண்டிஷனை முழுவதுமாக நீக்கி Rly., Bd., கடந்த 31.08.2015 அன்று உத்தரவு பிறப்பித்தது. NFIR - Rly., Bd., PNM Sub No.18/2016 மூலம் வலியுறுத்தப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் இன்டர் இரயில்வே ரெக்கியூஸ்ட் டிரான்ஸ்பருக்கு இருந்த 5 வருட சர்வீஸ் கன்டிஷனை மீயூச்சுவல், ஸ்பவுஸ் கிரவுண்ட், டிஸ்ஸபல்டு குழந்தைகளை பராமரிக்கும் தொழிலாளர்கள், டிஸ்சபல்டு சேலஞ்ச் தொழிலாளர்களுக்கு நீக்கி 10.2.2017 அன்று Rly., Bd., உத்தரவு பிறப்பித்தது. மேலும் உடனடியாக டிரான்ஸ்பர் செய்வதற்கான அதிகாரத்தை DRM களுக்கு Rly., Bd., Lr.No.2018 /Trans Cell./ Representation dt. 01.11.2018 உத்தரவை பெற்றுத் தந்துள்ளது.

## 4. SRES - NFIR ன் பொதுவான சாதனைகள்

1. யூனிபார்ம் அணிபவர்களுக்கு டிரஸ் அலவன்ஸ் ரூ.5000/–, ரூ.10,000/– வழங்க Rly., Bd., உத்தரவு.
2. செகந்திராபாத்தில் 13 ஆண்டுகளுக்கு முன்பாக NFIR நடத்திய சேப்டி கூட்டத்தில் இரயில்வே அமைச்சருடன் பேசி Full Board கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டு SRRS திட்டத்தை கொண்டு வந்து LARSGESS திட்டமாக மாற்றி 60 ஆயிரத்திற்கும் மேலான தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு வேலை

வாங்கிக்கொடுத்தோம். தற்போது கோர்ட் தடை செய்துள்ளது. இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கையை SRES-NFIR எடுத்துள்ளது.

3. NFIR எடுத்த தொடர்முயற்சியின் பயனாக 6வது ஊதியக்குழு அமுல்படுத்திய போது மெர்ஜர் செய்யப்பட்ட கிரேடுகளில் **01.01.2006** முதல் **29.8.2008** க்கு இடைப்பட்ட காலத்தில் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு பே ரீ பிக்சேஷன் செய்து **8** முதல் **10** ஆண்டுகளுக்குண்டான கூடுதல் பணத்தை அரியர்சுடன் பெற்றுத்தந்தது.

4. NFIRன் தொடர் முயற்சியினால் ரூ.**1500/–** ஆக இருந்த CEA மாதம் ரூ.**2250/–** ஆகவும் ரூ.**4500/–** ஆக இருந்த ஹாஸ்டல் சப்சிடி மாதம் ரூ.**6750/–** ஆகவும், டிராவலிங் அலவென்ஸ் லெவல் **1** முதல் **5** வரை ரூ.**450/–** ஆகவும், லெவல் **6** முதல் **8** வரை ரூ.**750/–** ஆகவும் வழங்க Rly., Bd., உத்தரவு.

5. காங்கிரஸ் கட்சியின் துணை கொண்டு 5வது ஊதியக்குழுவில் 31%, **6**வது ஊதியக்குழுவில் 54% சம்பள உயர்வு பெற்றுத்தந்தது SRES - NFIR. 7வது ஊதியக்குழுவில் **14.28** % சம்பள உயர்வையும், பெற்றுக் கொண்டிருந்த அலவன்ஸ் & அட்வான்சுகளை இழந்தும், HRA 24%,16%, 8% ஆக குறைத்தும், குறைந்த பட்ச சம்பளம் ரூ.**26000/–** பெற முடியாமல் போனதற்கு தொழிற்சங்கங்களிடையே ஒற்றுமை இல்லாமல் போனது தான் காரணம்.

6. MACPS பதவி உயர்வுக்கு Very Good தேவை என்பதை மாற்றி PNM Sub No. 22/2017 & NC/JCM மூலமாக உத்தரவுகளை பெற்றோம் – 27.2.2018 மேலும் RBE No. 86/19 of 28.05.2019

8. 7வது ஊதியக்குழு சம்பளத்தின் அடிப்படையில் OT அலவன்ஸ் வழங்க வலியுறுத்திய போது **01.7.2017** முதல் அமுல்படுத்த Rly., Bd., 28.11.2017 அன்று உத்தரவு பிறப்பித்தது. OT அலவன்ஸ் என்பது சம்பளத்தின் ஒரு பகுதி என NFIR-DC/JCM Item No, 24/2010 மூலம் பெறப்பட்ட உத்தரவுப்படி **01.01.2016** முதல் முன்தேதியிட்டு அமுல்படுத்த Rly., Bd., (RBE No.41/2018) 20.3.2018 அன்று உத்தரவு பிறப்பித்தது.

9. முன்னாள் இராணுவத்தினர்களின் பிரச்சினைகளுக்கு NFIR - PNM Sub No. 01/2013 & 05/2016 தீர்வு காண வலியுறுத்தி வருகிறது.

10. SRESன் முயற்சியால் 7th CPC படி புரமோஷன் பெற்றவர்களின் பே பிக்ஸேஷனை Rule 13 of CCS(RP) Rule 2016 படி ஆப்ஷன் அடிப்படையில் ரீ பிக்ஸேஷன் செய்து கூடுதல் இன்கிரிமெண்ட் வழங்க Rly., Bd., 31-7-2017ல் உத்தரவு.

11. NFIR - PNM Sub No.36/2015 மூலம் குரூப் 'D' தொழிலாளர்கள் ஒரு பிரிவிலிருந்து வேறு பிரிவிற்கு மாற்றம் செய்து கொள்வதற்கு Rly., Bd., உத்தரவு பிறப்பித்தது. RBE No. 99/2018 dt.6.7.18

12. சென்னைக்கு வழங்கப்படும் HRA மற்றும் டிரான்ஸ்போர்ட் அலவன்ஸை அரக்கோணம், திருத்தணி, பொன்பாடி, கும்மிடிபூண்டி, எலாவூர், அச்சரபாக்கம், செங்கல்பட்டு, பாலூர், காஞ்சிபுரம், தக்கோளம், திருமால்பூர் போன்ற பகுதிகளுக்கும் வழங்க வேண்டும் என்று NFIRன் கோரிக்கைக்கு நிதி அமைச்சகம் கடந்த **2.7.18** அன்று கடிதம் அனுப்பியுள்ளது.

13. NFIR எடுத்த தொடர் முயற்சியின் பயனாக GP 4600ல் உள்ள 75% சூப்பர்வைஸர்களுக்கு, GP4800 வழங்கிட நிதி அமைச்சகத்திற்கு **20.4.17, 25.5.18** மற்றும் **13.7.18** தேதிகளில் இரயில்வே அமைச்சகம் கடிதம் கொடுத்துள்ளது.

14. வருமான வரி சமர்ப்பிக்கும் சிறப்பு முகாமை பெரம்பூரில் உள்ள SRES மத்திய சங்க அலுவலகத்தில் தொடர்ந்து இரண்டு மாதங்கள் IT Return File இலவசமாக செய்ததால் **5200** தொழிலாளர்களுக்கு மேல் பயனடைந்தனர். இந்த ஆண்டும் இலவசமாக செய்து கொடுக்கப்படும்.

15. Free, Fair & Simplified Selection நடத்தவேண்டும், 100% objective type questions, multiple choice, CBT mode/ OMR Sheets,Large Question banks போன்ற கோரிக்கையை NFIR - PNM Sub No. 02/ 2017, 2/2018 வைத்து இரயில்வே போர்டு உத்தரவு RBE No.196/2018 யை பெற்றோம்.

16. Group D தொழிலாளர்களின் பதவிகளின் பெயர்களை மாற்றி Assistant என்ற புதிய பெயரில் வாங்கியது.

17. 7வது ஊதியக்குழு அமுல்படுத்தும் தேதியை பதவி உயர்வு பெற்ற பிறகோ/ இன்கிரிமெண்ட் **1.7.2016** வாங்கிய பிறகோ அமுல்படுத்திக் கொள்ளலாம் என்ற உத்தரவை மீண்டும் வாங்கிக்கொடுத்தோம். RBE No.197/ 2017

18. 7- CPC நைட் டியூட்டி அலவன்ஸ் குறைவு என்பதை NFIR சுட்டிக் காட்டி இதை மாற்றுகிறோம் என்ற

கடிதத்தை இரயில்வே போர்டிடமிருந்து பெற்றுள்ளது E(P&A)II-2017/HW-1 dated 3.1.2019.

19. GP 1800லிருந்து GP 1900 பதவி உயர்வு பெறுவதற்கு 3 வருட காலவரம்பை 2 வருடமாக குறைக்கப்பட்டது RBE No.03/2019 of 8.1.19 .
20. 27.10.17 வரை மெடிக்கல் மற்றும் அப்ளிகேஷன் ப்ராஸஸ் செய்திருந்தால் LARSGESS வேலை கிடைக்கும்.
21. ரிஸ்க் & ஹார்டு ஷிப் அலவன்ஸை Operating Staff, TRD, Electrical Staff of AC, EMU, Power, TLD, Workshop, S&T, Bridge, P.Way Techs, C&W, TMU, DSL, AC Loco, Traffic, Medical, மேலும் பல கேட்டகரிகளுக்கு வழங்க PNM Sub No. 14/2018 மூலமாக கோரிக்கை வைக்கப்பட்டு வலியுறுத்தியதின் பயனாக இரயில்வே போர்டு கமிட்டி அமைத்துள்ளது. Rly. Bd., Lr. No.ERB -I/2019/23/09 dt. 11.02.19.
22. 1.1.2006 முதல் 31.12.2015 வரை 6-CPCல் உள்ள க்ரேடில் (1900, 2000, 2400, 2800, 4200, 4600, 4800, 5400) பதவி உயர்வு பெற்றவர்கள் அவர்கள் சம்பளத்தை DR Quotaவில் வந்தவர்களுக்கு இணையாக வழங்கவேண்டும் என்ற உத்தரவை Rly. Bd., யிடமிருந்து பெற்றோம் RBE No, 158/2018.
23. SRES - NFIR, S&T Staffக்கு Protective gearsக்கான உத்தரவை இரயில்வே போர்டிடம் பெற்றுள்ளது.
24. தொழிலாளர்களின் பதவி உயர்வுக்கு GDCE Quotaவை 60% உயர்த்த PNM 31/2018 மூலம் கோரிக்கை.
25. UMID புதிய மெடிக்கல் கார்டை நிர்வாகமே வழங்க SRES ன் நடவடிக்கை.
26. GIS - மாதம் ரூ.30க்கு பதிலாக ரூ.450 பிடித்தம் செய்து ரூ.15 லட்சம் இன்சூரன்ஸ் வழங்க ஏற்பாடு.
27. PNM 5/2019 - டிரான்ஸ்பரில் Lower Gradeல் வந்த தொழிலாளர்களுக்கு MACPS வழங்க நடவடிக்கை.

- **நாசகரமான 100 நாள் திட்டத்தை ரத்து செய்திட SRES க்கு வாக்களிப்பீர்.**
- **இரயில்வே போக்குவரத்து, இரயில் நிலையங்கள், உற்பத்தி பிரிவு, பிரிண்டிங் பிரஸ், ஒர்க்ஷாப் மற்றும் ஓபன் லைன் ஆகியவற்றை தனியாரிடம் தாரை வார்ப்பதை தடுத்திட போராடி கொண்டிருக்கும் SRES க்கு வாக்களிப்பீர்.**
- **55 வயது அல்லது 30 வருடம் சர்வீஸ் செய்த தொழிலாளர்களுக்கு கட்டாய ஓய்வு கொடுப்பதை தடுத்திட முழு மூச்சாக எதிர்த்திடும் SRES க்கு வாக்களிப்பீர்.**
- **புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்திட SRES க்கு வாக்களிப்பீர்.**

**மோடி அரசு பதவியேற்ற முதலாண்டில் இது போன்ற பல தொழிலாள விரோத திட்டங்களை அமுல்படுத்துவதற்காக 2014–15 ஆண்டு பிறப்பித்த அனைத்து உத்தரவுகளையும் SRES- NFIR போராட்டங்கள் வாயிலாக முறியடித்துள்ளது.**

# SRES க்கு வாக்களிப்பீர்... வெற்றி பெறச் செய்வீர்...

SRES

**Dr.M.இராகவைய்யாஜி**
**GS/NFIR & President/SRES**

**அறிக்கை எண் 1000**
**10.07.19**

**P.S.சூரியபிரகாசம்**
**GS/SRES & JGS/NFIR**

**ஒவ்வொரு டிபார்ட்மெண்ட்வாரியாக செய்த சாதனைகளுக்கான அறிக்கையை கிளை நிர்வாகிகளிடம் பெற்றுக்கொள்ளவும்.**

**குறிப்பு : இரயில்வே போர்டு வெப்ஸைட்டிற்கு சென்று NFIR - PNM Sub No. யை போட்டு கிளிக் செய்தால் SRES - NFIR சாதனைகள் உங்களுக்கே புரியும்.**

**For More Details : sresindia.org & Click SRES Circulars.**